Shrimp Supreme Chicken



விளம்பரம்

சிங்கப்பூர்

# சிங்கப்பூரில் சுவாசப் பிரச்சினைகளை ஆராய புதிய ஆய்வு நிலையம்

வாசிப்புநேரம் - 1 நிமிடம்



படம்: NTU

வெளியீடு : 20 Sep 2023 09:15PM
புதுப்பிப்பு : 21 Sep 2023 04:31PM

Aa

ஆஸ்த்துமா போன்ற நாள்பட்ட சுவாச நோய்களால் அவதியுறும் ஆசிய மக்களுக்கு மேம்பட்ட சிகிச்சைமுறையில் கவனம் செலுத்தும் புதிய ஆய்வு நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

நுரையீரல் சுகாதாரத்துக்கான சுவாசக் கல்வி நிலையம் என்னும் அந்த நிலையம், நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் உள்ளது.

விளம்பரம்

சிங்கப்பூரில், உடற்குறை உருவாவதற்கான முதல் 20 காரணங்களில் சுவாச நோய்களும் இடம்பெற்றுள்ளன.

உள்நாட்டிலும் உலக அளவிலும் உள்ள சுமார் 50 அமைப்புகள், ஆய்வு நிலையங்கள், மருத்துவமனைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றைப் புதிய நிலையம் ஒன்றிணைத்துச் செயல்படும்.

500க்கும் அதிகமான ஆய்வாளர்கள், தொழில்துறையினர் ஆகியோரின் நிபுணத்துவத்தையும் நிலையம் பயன்படுத்திக்கொள்ளும்.

சுவாச நோய் தொடர்பான ஆய்வுகள் பெரும்பாலும் ஐரோப்பியர்களை இலக்காகக்கொண்டே நடத்தப்பட்டுள்ளன.

எனவே ஆசிய மக்களுக்கு ஏற்படும் சுவாச நோய் பற்றித் தெரிந்துகொள்ள இன்னும் அதிக வாய்ப்பிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

*ஆதாரம் : AGENCIES*

**தொடர்புடைய தலைப்புகள்**

சுகாதாரம்

விளம்பரம்

## மேலும் செய்திகள் கட்டுரைகள்



**திரு. ஈஸ்வரனை நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விலக்கக் கோரும் தீர்மானம் நிராகரிப்பு**



**கனடாவுக்குப் பயணம் செய்வதைத் தவிர்க்கும்படி கூறும் இந்தியா**



**ஒரே வாரத்தில் 2 வெளிநாட்டு ஊழியர்கள் மரணம்**




**வேலையும் செய்து லாரியும் ஓட்டும் ஊழியருக்கு 12 மணி நேரம் வேலை - எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது?**

## You Might Also Like




